# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 141 | 4 Pages | 24.12.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர் : 01 | இதழ் : 141 | 4 பக்கங்கள் | 24.12.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## இந்திய கச்சா எண்ணெய் கப்பல் மீது ட்ரோன் மூலம் தாக்குதல் நடுக்கடலில் பரபரப்பு

டெல்லி, டிச.24

சவுதியில் இருந்து மங்களூர் நோக்கி வந்த இந்திய கச்சா எண்ணெய் கப்பல் மீது தாக்குதல் நடந்துள்ளது. கப்பலில் இருப்பவர்களை மீட்க கடலோர காவல் படையின் விக்ரம் கப்பல் விரைந்துள்ளது.


கச்சாஎண்ணெய்கப்பல்மீதுட்ரோன்மூலம்தாக்குதல்நடத்தப்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

கப்பலில் உள்ள அனைவரும் பாதுகாப்பாக உள்ளதாக பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

கச்சா எண்ணெய் கப்பலை நோக்கி போர்க்கப்பலும் அனுப்பப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை தகவல் வெளியாகியுள்ளது.

எம்.வி.செம் புளூட்டோ கச்சா எண்ணெய் கப்பலை நோக்கி போர்க்கப்பலும் அனுப்பப்பட்டுள்ளதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

## பேட்டரி ஸ்வாப்பிங் எளிதானது அல்ல: ஏத்தர் சிஇஓ



மும்பை, டிச.24

ஒருலிட்டர்பெட்ரோல்சுமார்ரூ.100எனும்அளவில்விற்பனையாகிறது. இந்த விலையேற்றத்தை சமாளிக்க முடியாமல் தவித்து வந்தவர்களுக்கு பேட்டரியை பயன்படுத்தி இயங்கும் எலக்ட்ரிக் வாகனங்கள் *(electric vehicle)* நல்ல மாற்றாக உருவெடுத்தது.

ஏத்தர், ஓலா போன்ற புது நிறுவனங்களும், வாகன தயாரிப்பில் பாரம்பரியம் மிக்க பஜாஜ், ஹீரோ, டிவிஎஸ் போன்ற நிறுவனங்களும் தங்கள் மாடல்களை சந்தையில் அறிமுகப்படுத்தி வருகின்றன.

இந்தியாவில் எலக்ட்ரிக் இரு சக்கர வாகனங்களில் முன்னணியில் உள்ள நிறுவனம், ஏத்தர்.

வளர்ந்து வரும் இத்துறையில் அடுத்த முன்னெடுப்பாக சார்ஜ் குறைந்தவுடன் தங்கள் இரு சக்கர வாகனத்தில் உள்ள பேட்டரியை, நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் பரிமாற்றி *(battery swapping)* கொள்ளும் வசதியைஆங்காங்கேஏற்படுத்தசிலநிறுவனங்கள்முனைந்துவருகின்றன. இவ்வசதியை ஒரு சிறப்பு அம்சமாக கூறி வாகன விற்பனையும் நடந்து வருகிறது.

ஆனால், இந்த முயற்சியை ஏத்தர் நிறுவன தலைமை செயல் அதிகாரி *(CEO)* தருண் மேத்தா *(Tarun Mehta)* விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

ஒரு பேட்டரி என்பது 10 கிலோ எடைக்கு குறையாமல் இருக்கும். அதனை மாற்றி பொருத்தும் போது கீழே போட்டு விட கூடாது. வயதானவர்களுக்கு இப்பணி எளிதில்லை. அவர்களுக்கு உதவ பணியாளர்களை நியமிக்க வேண்டும். ஒரு மாற்றலுக்கான பணியகத்தில் 200 பேட்டரிகளாவது எப்போதும் முழு சார்ஜுடன் இருக்க வேண்டும். இதற்கு பெரிய பரப்பளவிலான இடம் தேவைப்படும். இந்த பேட்டரிகள் அனைத்தும் விலையுயர்ந்தவை என்பதால் அவற்றை பாதுகாக்க இரவும் பகலும் பணியில் இருக்கும் பாதுகாப்பாளர்களை நியமிக்க வேண்டும். இவையனைத்தும் செலவினங்களை கூட்டி விடும். இதை தவிர, ஒரு புது எலக்ட்ரிக் இரு சக்கர வாகனத்தை வாங்கியவர், சார்ஜிங் நிலையத்தில் உள்ள பழைய பேட்டரியுடன் தனது புது பேட்டரியை பரிமாற்றி கொள்ள தயங்குவார். எனவே நாங்கள் இத்திட்டத்தை பெரிதாக ஆதரிக்கவில்லை.

இவ்வாறு தருண் கூறியுள்ளார்.

## தவறான விமர்சனங்களை தவிர்க்க வேண்டும் இந்திய வானிலை ஆய்வு மையம்

டெல்லி, டிச.24

இந்திய வானிலை ஆய்வு மையம் சார்பில் கூறியிருப்பதாவது:




சென்னை வானிலையை கண்காணிக்க டாப்ளர் ரேடார்கள். சென்னை வானிலை ஆய்வு மையம் நவீனமாக இல்லாமல் இருப்பதாக தவறான விமர்சனங்களை தவிர்க்க வேண்டும்.

தென் தமிழகத்தை கண்காணிக்க 3 டாப்ளர் ரேடார்கள் பயன்பாட்டில் உள்ளன.

உலக வானிலை அமைப்பு இந்திய வானிலை ஆய்வு துறையின் கட்டமைப்பு, முன்னெச்சரிக்கைகளை உலகத்தரம் வாய்ந்தது என பாராட்டியுள்ளது.

வர்தா, கஜா, நிவர், மாண்டோஸ், மிச்சாங் புயல்கள் குறித்து வானிலை ஆய்வுமையத்தின்எச்சரிக்கையால்பெரும்உயிர்சேதம்தவிர்க்கப்பட்டது.

இந்தியாவின் சிறந்த ரேடார் தொழில்நுட்ப வல்லுநர்கள் சென்னை வானிலை ஆய்வு மையத்தில் பணியாற்றுகிறார்கள்.

சென்னை வானிலை மையத்தை இலக்காக வைத்து செய்யப்படும் விமர்சனங்கள அர்ப்பணிப்போடு இயங்கும் பணியாளர்களை புண்படுத்துகிறது.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய உழவர்கள் நாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, டிச.24

தேசியஉழவர்கள்நாளையொட்டி முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

"உழுவார் உலகத்தார்க்கு ஆணி" எனும் அளவில் உலகை உய்விக்கும் உயர்குடியாம் உழவர்கள் அனைவருக்கும் தேசிய உழவர்கள் நாள் வாழ்த்துகள்.

பெருமழையால் பயிர்களையும் கால்நடைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள உழவர்களுக்கு உறுதுணையாக நமது அரசு நின்று காக்கும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சொர்க்கவாசல் திறப்பின்போது பெருமாள் சாமி சிலை தலைகீழாக கவிழ்ந்தது

தருமபுரி, டிச.24

பென்னாகரம் அருகே உள்ள ஆளேபுரம் ஸ்ரீலட்சுமி நரசிம்ம சாமி ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இந்து சமய அறநிலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்த கோவிலில் இன்று மிகவும் சிறப்பு வாய்ந்த சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தநிகழ்ச்சியில்கலந்துகொள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கோவிலில் காத்திருந்தனர். அப்போது சாமி சிலை சொர்க்கவாசல் வழியாக வெளியே வந்து ஊர்வலத்திற்கு புறப்பட்டது.

அப்போது சாமி சிலையை சொர்க்க வாசல் வழியாக கொண்டு வந்தபோது பக்தர்கள் சிலையை தோளில் வைத்து ஊஞ்சலில் ஆடுவதுபோல் அசைத்தனர்.

அப்போது முறையாக வாகனத்தில் சாமி சிலையை கட்டவில்லை



என்பதால், பாதி தூரத்திலேயே, சாமி சிலை தலைகீழாக குப்புறக் கவிழ்ந்தது. இதனால் சிலை மீது இருந்த அலங்காரங்கள் அனைத்தும் கலைந்தது.

பின்பு மீண்டும் முறைப்படி சாமி சிலை வைத்து அலங்காரங்கள் செய்யப்பட்டு பூஜைகள் செய்யப்பட்ட பின்பு சாமி சிலை உரிய முறையில் ஊர்வலம் செல்லும் நிலையில் வைக்கப்பட்டது.

சொர்க்கவாசல் திறப்பின் போது பெருமாளை தரிசனம் செய்ய வந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் முன்பு, பெருமாள் சிலை தலைகீழாக கவிழ்ந்ததால் பக்தர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.

அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் கோவில் நிர்வாகத்தின் அலட்சியமே இதற்கு காரணம் என பக்தர்கள் வருத்தம் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்து வீடியோ சமூக வலை தளங்களில் வைரலானதால் பரபரப்பை ஏற்படுத்தியது.

## அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கத்தில் நடைபெறாது: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு

மதுரை, டிச.24

ஜல்லிக்கட்டு நடத்துவது தொடர்பாக மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

ஆலோசனைக்குப்பிறகு கலெக்டர் சங்கீதா கூறியதாவது:

★ அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டுக்காக கீழக்கரை கிராமத்தில் 44 கோடி ரூபாய் செலவில் 66 ஏக்கரில் மைதானம் அமைக்கப்பட்டு வருகிறது.

★ அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அடுத்த ஆண்டு வழக்கமான இடத்திலேயே நடைபெறும் என அறிவித்துள்ளார்.





2024ம் ஆண்டு அலங்காநல்லூர் அரங்கில் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், வழக்கமான இடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## எம்.ஜி.ஆர் 36வது நினைவு நாளில் "எம்.ஜி.ஆர் ரசிகன்" என பெயர் சூட்டி எம்.ஜி.ஆர் ரசிகர்களுக்கு பெருமை சேர்த்த சர்வதேச ஆர்.எஸ்.ஜி சமுக சேவை மைய நிறுவனர், தலைவர் கோபி காந்தி

சென்னை, டிச.24

சர்வதேச ஆர்.எஸ்.ஜி சமுக சேவை மைய நிறுவனர், தலைவர் கோபி காந்தி பல்வேறு சமுதாய "விழிப்புணர்வு குறும்படங்கள்" மற்றும் "முதல் மாணவன்", "வைரமகன்", "வீரக்கலை" ஆகிய "கருத்து" திரைப்படங்களையும் கதை எழுதி, தயாரித்து, நடித்து, வெளியீடுசெய்துள்ளார். நான்காவது திரைப்படமாக "உச்சம் தொடு" என சர்வதேச விளையாட்டு வீரரின் வாழ்வியலில் கோபி காந்தி தயாரித்து, நடித்து வருகிறார். தொடர்ந்து ஐந்தாவது திரைப்படமாக உலக புகழ் பெற்ற தலைவர் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் ரசிகனாக கோபி காந்தி முதல் முறையாக இயக்கி, நடிக்க உள்ளார். அத்திரைப்படத்தின் பெயரை எம்.ஜி.ஆர்36வதுநினைவுநாளில் "எம்.ஜி.ஆர் ரசிகன்" என பெயர் சூட்டி எம்.ஜி.ஆர் ரசிகர்களுக்கு பெருமை சேர்த்துள்ளார். இது குறித்து கோபி காந்தி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது. எம்.ஜி.ஆர் சிறு வயதில் உணவிற்காக நாடக கொட்டகையில்வேலைக்குசேர்ந்து




அதன் மூலம் உயர்ந்த நடிகரானார். ஏழை,எளியமக்களின்நன்மைக்காக அறக்கட்டளையை தோற்றுவித்து அவர் சம்பாதித்த பணம் அனைத்தையும் ஏழை, எளிய மக்களுக்குவழங்கினார்.அரசாங்கம் மூலம் மக்களுக்கு நன்மை செய்வதற்காக அ.தி.மு.க என்ற மாபெரும் இயக்கத்தை நிறுவினார். அதன் மூலம் ஏழை, எளிய, பொது மக்களுக்குஎண்ணற்றநன்மைகளை செய்தார். இன்றும் எம்.ஜி.ஆர் நிறுவிய காரணத்திற்காக மக்கள் அ.தி.மு.க கட்சிக்கு ஆதரவளித்து வருகிறார்கள். உண்மையாக நடப்பவர்களுக்கு எம்.ஜி.ஆர்ன் ஆசிர்வாதம் மூலமாக கண்டிப்பாக நன்மை நடக்கும், எம்.ஜி.ஆர் மறைந்து முப்பத்து ஆறு வருடங்களாகியும் இன்றும் உலகம் முழுவதும் குழந்தைகள் முதல் கோடிக்கணக்கான ரசிகர்கள் இருக்கிறார்கள். அவர்களை போல் நானும் எம்.ஜி.ஆர்ன் தீவிர ரசிகன் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்அன்றும்அவரைப்பற்றி கதை எழுதி திரைப்படத்தை இயக்குவார்கள். எம்.ஜி.ஆர் இருந்தாலும்,மறைந்தாலும்ஆயிரம் பொன் என்பது போல் வாழ்ந்து மறைந்த மாபெரும் தலைவர், அவர் சம்பாதித்த அனைத்தையும் மக்களுக்காகவே வழங்கி சென்றார், சினிமா, அரசியல் இரண்டிலுமே மக்களுக்குசேவைசெய்யவேண்டும் என்று எண்ணினார். ஆகையால் இரண்டிலும் மக்கள் அவர் மீது அளவு கடந்த பாசம் கொண்டனர், அப்படிப்பட்ட உயரிய தலைவரின் ரசிகனாக நடிப்பதற்காக பல எம்.ஜி.ஆர் ரசிகர்களை சந்தித்து அவர்களிடம் உள்ள சுவாரஸ்யங்களை சேகரித்து கதை எழுதி வருகிறேன். அவரது நினைவு நாளில் படத்தின் பெயர் வைக்க முடிவு செய்துஎம்.ஜி.ஆருக்கு நெருக்கமான 7 எழுத்தில் "எம்.ஜி.ஆர் ரசிகன்" என பெயர் சூட்டி உள்ளேன். அனைவருக்கும் பிடிக்கும் விதமாக படத்தை உருவாக்க திட்டமிட்டுள்ளேன். இவ்வாறு திரைப்பட பெயர் சூட்டு விழா செய்தியாளர்கள் சந்திப்பில் தயாரிப்பாளர், விநியோகஸ்தர், இயக்குனர், கதாசிரியர், நடிகர் கோபி காந்தி பேசினார். விழாவில் படத்தின் ஒளிப்பதிவாளர் குமரன் ஜீ, எடிட்டர் கோகுல் கிருஷ்ணா பங்கேற்றனர்.

# உதயநிதி ஸ்டாலின் பேசியதில் எந்த தவறும் இல்லை கே.எஸ்.அழகிரி பேட்டி




சென்னை, டிச.24

தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி அவசர அழைப்பின் பேரில் இன்றுடெல்லிபுறப்பட்டு சென்றார். முன்னதாக அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியா கூட்டணி கூட்டத்துக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒருநாள் சென்று வந்ததை பெரிதுபடுத்துகிறார்கள். ஒரு முதலமைச்சர்எங்கிருந்தாலும் சரி, நடக்க வேண்டிய பணிகள் நடக்கும். மழை தொடங்கியதுமே அந்தந்த மாவட்ட அமைச்சர்களை மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து விட்டார்.

இது போன்ற குற்றச்சாட்டை சொல்ல கூடியவர்கள் மணிப்பூரில் 6 மாத காலம் கலவரம் நடந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். பிரதமர் மோடி ஒரு முறை கூட அங்கு சென்றதும் இல்லை. அதுபற்றி பேசியதும் இல்லை.

இதை போன்ற தலைமையை வைத்துக் கொண்டு பேசுவது கண்மூடித்தனமாக தமிழக அரசு மீது வெறுப்பை காட்டுவதாகத்தான் அர்த்தம்.

தமிழகத்துக்கு மத்திய அரசு பேரிடர் நிவாரண நிதியாக எதுவும் ஒதுக்கவில்லை. தர வேண்டிய நிதியை மட்டுமே தந்துள்ளார்கள். தற்போது ஏற்பட்ட பெரும் சேதத்துக்கு தனியாக நிவாரணம் தர வேண்டும்.

நிவாரணம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதில் எந்த தரக் குறைவும் இல்லை. அவர் பேச்சு வழக்கில் பேசுவது போல் பேசி உள்ளார். இதை வைத்து அரசியல் ஆதாயம் தேடக்கூடாது. செய்ய வேண்டியதை செய்ய வேண்டும். சொல்ல வேண்டியதையேசொல்ல வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு விற்பனைக்கு வந்துள்ள விதவிதமான கேக்குகள்



அருவங்காடு, டிச.24

கிறிஸ்துமஸ் பண்டிகை நாளை மறுநாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் ஏற்கனவே தொடங்கி நடைபெற்று வருகின்றனர். கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகள் முன்பு ஸ்டார்களை தொங்க விடுவது, குடில்களும் வைத்துள்ளனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகையில் முக்கிய இடம் பிடிப்பது கேக்தான். கிறிஸ்தவர்கள் தங்களது உறவினர்கள் மற்றும் தங்களது நண்பர்களுக்கு கிறிஸ்துமஸ் தினத்தன்றுகேக்வாங்கிகொடுப்பது வழக்கம்.

இதனை அடுத்து அனைத்து பேக்கரிகளிலும் கேக் தயாரிப்பு பணிகள் நடந்து வருகிறது. நீலகிரி மாவட்டத்திலும் கிறிஸ்துமஸ் பண்டிகைகளை கட்ட தொடங்கி உள்ளது.

அங்குள்ள தேவாலயங்கள் அனைத்தும் மின்னொளியில் ஜொலிக்கின்றன. அங்கு கிறிஸ்து பிறப்பை உணர்த்தும் வகையிலான குடில்களும் அமைக்கப் பட்டுள்ளன. இதுதவிர வீடுகள் மற்றும் கடைகளிலும் ஸ்டார்கள் தொங்க விட்டு, குடில்களும் அமைத்துள்ளனர்.

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நீலகிரியில் உள்ள பேக்கரிகளில் கேக் வகைகள் மற்றும் ஹோம்மேட் சாக்லேட்டுகள் தயாரிக்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது. கிறிஸ்துமசுக்கு இன்னும் ஒரு நாளே இருப்பதால் கேக் விற்பனை சூடுபிடித்து உள்ளது. இந்த கேக்குகளிலும் மக்களை கவரும் வகையில், பல்வேறு வகையில் கேக்குகளைதயாரித்து வருகின்றன.

அந்த வகையில், சதுரம், வட்டம் மட்டுமின்றி கிறிஸ்துமஸ் தாத்தா, மயில், ரோஜா மலர் மற்றும் பல்வேறு வடிவங்களிலும் கேக்குகள் தயாரிக்கப் பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதுதவிர இயேசு கிறிஸ்து பிறப்பை உணர்த்தும் வகையிலான குடிலை போன்றும் கேக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இதனைகடைக்கு வரும் மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து தங்களுக்கு பிடித்தமான கேக்குகளை வாங்கி செல்கிறார்கள். ஒரு கிலோ கேக் ரூ.1800க்கு விற்பனையாகி வருகிறது. கடந்த ஆண்டு 1 கிலோ கேக் ரூ.600க்கு விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று நீலகிரி மாவட்டத்தில் ஹோம் மேட் சாக்லேட் தயாரிப்பு பணியும் மும்முரமாக நடந்து வருகிறது. உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, வெளி மாவட்டங்களில் இருந்து இங்கு சுற்றுலா வந்துள்ள மக்களும் தங்களுக்கு பிடித்தமான கேக் வகைகள் மற்றும் ஹோம் மேட் சாக்லேட்டுகளை வாங்கி செல்கின்றனர்.

இதனால் நீலகிரியில் உள்ள அனைத்து பேக்கரிகளிலும் விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது.

# பெரிய எச்சரிக்கையை மீறி செந்தூர் எக்ஸ்பிரஸ் ரெயிலை இயக்கியது ஏன்?




சென்னை: டிச.24

பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் இன்று தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

நான்கு மாவட்ட மழை வெள்ளத்தைப் பற்றி 12 ஆம் தேதியே வானிலை ஆய்வு மையம் சொல்லி விட்டது என்கிறார் நிதியமைச்சர்.

அப்படியென்றால் 17 மாலை 6 மணிக்கு காசி தமிழ்ச்சங்க ரெயிலின் துவக்கவிழாவை பிரதமரே நடத்திவைத்தாரே எப்படி? கொட்டும் பேய்மழையில் எண்ணிலடங்கா பயணிகளை பணயம் வைத்தாரே எப்படி?

அன்றைய தினம் கடும்மழையால் தென்மாவட்டங்களில் பல ரெயில்களை ரத்து செய்யமுடியாமல் போனதற்கு இவ்விழாவே காரணம் என

ரெயில்வே அதிகாரிகள் பலர்புலம்பியதை அறிவீர்களா? வானிலையின் இவ்வளவுப் பெரிய எச்சரிக்கையை மீறி செந்தூர் எக்ஸ்பிரஸ் மாலை 7 மணிக்கு புறப்பட்டதும்,

ஸ்ரீவைகுண்டத்தில் அது சிக்கிக்கொண்டு பயணிகள் இரண்டு நாட்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளானதற்கும் யார் பொறுப்பு?

தனது அரசின் கீழ் இயங்கும் வானிலை அறிக்கையை அறியாத பிரமதமரா? அல்லது என்னவானாலும் என்ன.. தமிழ்நாட்டு மக்கள்தானே என்ற மனநிலையா?

நிதியமைச்சர் அவர்களே!

மழை வெள்ள அபாயத்தைப் பற்றி முன்கூட்டியே சொல்லிவிட்டோம் என்று தாங்கள் சொன்ன திசைதிருப்பும் கருத்தை வாபஸ் பெறுங்கள்.

இல்லையென்றால் இந்த கருத்துக்கான பதிலை பிரதமரிடம் கேட்டுபெறுங்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வெள்ளம் பாதித்த 4 மாவட்டங்களில் மருத்துவ முகாம்களில் 95,127 பேருக்கு சிகிச்சை



நெல்லை, டிச.24

நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வெள்ள நீர் புகுந்த இடங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் இன்று ஆய்வு செய்தார். அப்போது சபாநாயகர் அப்பாவு, அரசு மருத்துவக் கல்லூரி டீன் ரேவதி ஆகியோர் உடன் இருந்தனர்.

மருத்துவமனையில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவு, டிஜிட்டல் எக்ஸ்ரே பிரிவு உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்ட அமைச்சர் மா.சுப்பிரமணியன் பின்னர்நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பில் தூத்துக்குடி மாவட்டம் அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் 6 முதல் 7 அடி உயரத்திற்கு தண்ணீர் வந்த நிலையில் அங்குள்ள கேத் லேப் பாதிக்கப்பட்டுள்ளது. அதனை சரி செய்ய ஒரு மாத கால ஆகும். அதுவரை நெல்லை மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படும்.

வெள்ளம் பாதித்த தூத்துக்குடி, நெல்லை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் 2,682 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. அதன் மூலம் 95 ஆயிரத்து 127 நபர்களுக்கு தற்போது வரை சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது. இதில் 764 பேருக்கு காய்ச்சல் இருப்பதாக கண்டறியப்பட்டு, அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. 2,565 நபர்கள் சளி உள்ளிட்ட நோய்கள் பாதிப்பில் இருப்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கும் சிகிச்சைஅளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் குணமாகி வருகிறார்கள்.

இந்தமருத்துவமுகாமை பல நாட்கள் தொடர்ந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இவை தவிர 93 நடமாடும் மருத்துவ முகாம்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் நடத்தப்படுகிறது. இந்த 4 மாவட்டங்களிலும் சேர்த்து 190 நடமாடும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகிறது. இதில் ஒரு மருத்துவர் உள்ளிட்ட 4 மருத்துவ ஊழியர்கள் பணியில் இருப்பார்கள்.

வெள்ளம் அதிகம் பாதித்த பகுதிகளில் ஏரல், ஸ்ரீவைகுண்டம், தூத்துக்குடி மாநகராட்சி, காயல்பட்டிணம் ஆகிய இடங்களில் அப்பல்லோ, மீனாட்சி மிஷன் உள்ளிட்ட 17 தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து மெகா மருத்துவ முகாம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணி வரை நடத்தப்படுகிறது.

நெல்லை மாவட்டத்திலும் தேவைப்பட்டால் மெகா மருத்துவ முகாம் நடத்தப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு சிகிச்சை அளிக்க 50 முதுநிலை மருத்துவர்கள் கூடுதலாக வரவழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 8,545 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 12 ஆயிரம் பேர் வரை டெங்கு காய்ச்சல் பாதிப்பு உள்ள நிலையில் இந்த ஆண்டு பாதிப்பு குறைந்துள்ளது.

டெங்கு பாதிப்பை பொறுத்தவரை முழு கட்டுப்பாட்டில் உள்ளது. கொரோனா பரவல் தமிழகத்தில் பெரிய அளவில் இல்லை. அதனையும் கண்காணித்து தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# கூடங்குளம் 2வது அணு உலையில் மின்உற்பத்தி நிறுத்தம்: 1,000 மெகாவாட் மின்உற்பத்தி பாதிப்பு



நெல்லை, டிச.24

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்ய நாட்டு உதவியுடன் தலா ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 2 அணு உலைகள் அமைக்கப்பட்டு உள்ளன. அதன்படி முதல் மற்றும் 2வது அணுஉலையில் இருந்து தலா 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இந்த இரு அணு உலைகளில் இருந்தும் உற்பத்தியாகும்மின்சாரம்நெல்லை அபிஷேகப்பட்டியில் உள்ளமத்தியமின்தொகுப்பில் இணைக்கப்பட்டு மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3,4வது அணு உலைகள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் 2வது அணு உலையில் இன்று ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக அங்கு மின்உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக அங்கிருந்து உற்பத்தியாகும் 1,000 மெகாவாட் மின்உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து இதைத்தொடர்ந்து பழுதை சரி செய்யும் பணியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகிறார்கள்.

விரைவில் பணிகள் சரி செய்யப்பட்டு மின்உற்பத்தி தொடங்கும் என அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. முதலாவது அணு உலையில் இருந்து வழக்கம் போல் 1,000 மெகாவாட் மின்உற்பத்தி நடைபெற்று வருகிறது.

# தாமிரபரணி ஆற்றில் பொதுமக்கள் இறங்க வேண்டாம்: கலெக்டர் எச்சரிக்கை




நெல்லை, டிச.24

நெல்லை மாவட்டத்தில் கடந்த 17, 18ந்தேதிகளில் பெய்த பெருமழை காரணமாக தாமிரபரணி ஆற்றில் இரு கரைகளையும் தொட்டபடி வெள்ளம் கரைபுரண்டு ஓடியது.

தற்போது மாவட்டத்தில் இயல்புநிலை திரும்பி உள்ள நிலையில் தாமிரபரணி ஆற்றிலும் வெள்ளம் குறைந்து விட்டது. இதன் காரணமாக பொதுமக்கள் மீண்டும் ஆற்றில் குளிக்க தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் ஆற்றில் பொதுமக்கள் குளிக்க வேண்டாம்எனமாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக கலெக்டர் கார்த்திகேயன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து பெரிய அளவில் குறைந்து இருந்தாலும் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மரங்கள், புதர் செடிகள், பாறைகள் ஆங்காங்கே நீருக்கடியில் உள்ளன. மேலும் பல்வேறு நீர் நிலைகளில் சகதி அதிகமாக உள்ளது.

எனவே தாமிரபரணி ஆறு உள்ளிட்ட நீர் நிலைகளுக்குள் இறங்கினால் இதுபோன்ற புதர்கள், கற்பாறைகள், சகதிகளில் சிக்கிக் கொள்ளக்கூடிய அபாயம் உள்ளது. அவ்வாறு சிக்கிக்கொண்டால் மீட்பது மிகவும் கடினமாகும்.

எனவே பொதுமக்கள் எக்காரணம் கொண்டும் தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகள், கால்வாய்கள், ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட எந்த நீர் நிலைகளுக்குள்ளும் இறங்க வேண்டாம். மேலும் கால்நடைகளையும் நீர்நிலைகளில் இறக்க வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இதேபோல், பெருமழை வெள்ள காலத்தில் பல்வேறு இடங்களில் வீடுகள், விவசாய நிலங்களில் தண்ணீர் புகுந்துள்ளது. நீர் வடிந்துள்ள இடங்களில் வீடுகளுக்கு செல்லும் மக்கள் மின் இணைப்புகளை முறையாக பரிசோதித்த பிறகு அவற்றை கையாள வேண்டும். இல்லாவிட்டால் மின்சாரம் தாக்க வாய்ப்புள்ளது.

விவசாய நிலங்கள், மரங்கள் ஆகிய பகுதிகளில் மின்கம்பிகள் ஏதேனும் உரசிக்கொண்டு உள்ளதா?, அறுந்துள்ளதா என்பதை எல்லாம் கவனமாக பார்த்த பிறகே மக்கள் செல்ல வேண்டும். இது தொடர்பாக புகார்கள், தகவல்கள் ஏதும் இருந்தால் உடனடியாக 'மின்னகம்' உதவி மையத்தை 94987 94987 என்றஎண்ணில்தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# துறிஞ்ப்பூண்டி தூய இருதய உயர்நிலைப் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டம்



மேல்மலையனூர், டிச.24

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம், துறிஞ்சிபூண்டியில் செயல்பட்டு வரும் தூய இருதய உயர்நிலைப்பள்ளியில் கிறிஸ்துமஸ் விழாவானது நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆரோக்கியதாஸ் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார்.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய வட்டார கல்வி குழு தலைவரும் ஒன்றிய குழு உறுப்பினருமான நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். பள்ளியின் தாளாளர் ஜெயசீலன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் கிறிஸ்துமஸ் வாழ்த்துரையினை பள்ளியின் தாளாளர் ஜெயசீலன் மற்றும் வட்டார கல்வி குழு தலைவர்நெடுஞ்செழியன் ஆகியோர்கள் வழங்கினார்கள். அப்போது பேசிய பள்ளியின் தாளாளர் ஜெயசீலன் ஏசுபிரானின் வாழ்க்கை வரலாறு மற்றும் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து விளக்கினார்.

அதனைத் தொடர்ந்து பேசிய வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் அரசு பள்ளிகளுக்கும், அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் தமிழக முதல்வர் எண்ணற்ற நலத்திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார் என்றும். குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய மாணவர்கள் பயன் பெறுகின்றனர்.

# 467வது கந்தூரி விழா: நாகூர் தர்காவில் கவர்னர் ஆர்.என்.ரவி பிரார்த்தனை

நாகப்பட்டினம், டிச.24

நாகை மாவட்டம் நாகூரில் ஆண்டவர் தர்கா உள்ளது. மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாகவும் விளங்கும் இந்த தர்காவில் 467வது கந்தூரி விழா கடந்த 14ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தன கூடு ஊர்வலம் இன்று மாலை நாகையில் இருந்து புறப்படுகிறது. நகரின் முக்கிய வீதிகளின் வழியாக சந்தன கூடு ஊர்வலம் சென்று நாளை (ஞாயிற்றுகிழமை) அதிகாலை நாகூர் ஆண்டவருக்கு சந்தனம் பூசும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்த நிலையில் கந்தூரி விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி இன்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வந்தார்.



பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்டு சாலை மார்க்கமாக நாகூர் தர்காவுக்கு சென்றார்.

அங்கு அவருக்கு மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்க்கீஸ் மற்றும் தர்கா நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் தர்காவுக்குள் சென்று பிரார்த்தனை செய்தார்.

அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருச்சி சென்றார்.

இந்த நிலையில் நீட் தேர்வில் விலக்கு உள்ளிட்ட தமிழக அரசு சட்டசபையில் நிறைவேற்றிய பல்வேறு தீர்மானங்களுக்கு கவர்னர் ஆர்.என்.ரவி கையெழுத்து போடாமல் கிடப்பில் போட்டுள்ளதை கண்டித்தும், அவரது வருகையை கண்டித்தும் நாகூர் அருகே கீழ்வேளூர் பகுதியில் மாவட்ட காங்கிரஸ் தலைவர் அமிர்தராஜா தலைமையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தை, இந்திய கம்யூனிஸ்ட், திராவிட கழகம், மனிதநேய மக்கள் கட்சி, எஸ்.டி.பி.ஐ உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் ஏராளமானோர் கருப்பு கொடிகளுடன் திரண்டனர். அவர்களை போலீசார் பேரிகார்டு கொண்டு தடுத்தனர்.

இருந்தாலும் கவர்னருக்கு எதிராக கருப்பு கொடிகளை காட்டி கோஷங்கள் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து போராட்டம் நடத்திய 100க்கும் மேற்பட்டவர்களை கவர்னர் வருகைக்கு முன்பாகவே போலீசார் கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தி மண்டபத்தில் தங்க வைத்தனர். தொடர்ந்து போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# இருசக்கர வாகனங்களில் சாகசம் செய்தால் கடும் நடவடிக்கை

பொன்னேரி: டிச.24

பொன்னேரி பஞ்செட்டி திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. குறிப்பாக மீஞ்சூரை அடுத்த வல்லூர் சந்திப்பில் இருந்து சென்னை துறைமுகத்திற்கு செல்லும் கனரக வாகனங்களால் பொது மக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது.

இதனையடுத்து வல்லூர் சந்திப்பில் இருந்து மணலி, எண்ணூர் மற்றும் சென்னை துறைமுகத்திற்கு செல்லும் கனரக வாகனங்களுக்கு சாலையில் தனிப்பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சரக்கு பெட்டக வாகனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தனி வழித்தடத்தை ஆவடி போலீஸ் கமிஷனர் சங்கர் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

பொது மக்களின் வாகனங்கள் எளிதாக செல்லும் வகையில் துறைமுகம் நோக்கி செல்லும் சரக்கு வாகனங்களுக்கு தனி வழி அமைக்கப்பட்டுள்ளது.



இதன் காரணமாக போக்குவரத்து நெரிசல் குறையும். சாலையோரங்களில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சாலையில் அதிவேகமாகவும், சாகசங்கள் செய்தபடியும், அபாயகரமாகவும் இருசக்கர வாகனங்கள் மற்றும் பிற வாகனங்களை இயக்குபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விபத்துக்களை குறைக்கும் வகையில் போக்குவரத்து காவல்துறையினர் மூலம் சாலை தடுப்புகளில் ஒளிரும் பட்டைகளை ஒட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# கோயம்பேடு மார்க்கெட்டுக்கு வரத்து குறைவால் பூண்டு விலை உயர்வு

சென்னை, டிச.24

பூண்டு விளைச்சல் குறைந்துள்ளதால் கடந்த சில வாரங்களாகவே பூண்டு விலை அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து குறைந்து உள்ளது. இதன் காரணமாக கோயம்பேடு மார்க்கெட்டில் பூண்டு விலை அதிகரித்துள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டில் தற்போது ஒரு கிலோ பூண்டு ரூ.350 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 2 வாரங்களில் மட்டும் கிலோவுக்கு ரூ.150 உயர்ந்து உள்ளது. கோயம்பேடு மார்க்கெட்டுக்கு பூண்டு வரத்து குறைந்து விட்டதால் விலை உயர்ந்து வருவதாக வியாபாரிகள் தெரிவித்து உள்ளனர். மேலும் கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படும் காய்கறிகள் விலை கிலோவில் வருமாறு:

வெங்காயம் ரூ.28, தக்காளி ரூ.20, உருளைகிழங்கு ரூ.27, சின்ன வெங்காயம் ரூ.80, ஊட்டி கேரட் ரூ.40, பீன்ஸ் ரூ.35, பீட்ரூட் ரூ.45, முட்டைகோஸ் ரூ.15, வெண்டைக்காய் ரூ.45, கத்தரிக்காய் ரூ.50, காராமணி ரூ.50, பாகற்காய் ரூ.50, புடலங்காய் ரூ.40.

# 20 மீனவ கிராம மக்கள் 2 இடங்களில் மீண்டும் மறியல்

திருவொற்றியூர், டிச.24

மிச்சாங் புயலினால் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் போது எண்ணூர் முகத்துவாரம் பகுதியில் எண்ணெய் கழிவுகள் கலந்தது. இதில் மீனவர்களின் படகுகள் வலைகள் சேதம் அடைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில் திருவொற்றியூர் பகுதியைச் சேர்ந்த திருச்சிணாங்குப்பம், ஒண்டிக்குப்பம், நல்ல தண்ணி ஓடை குப்பம், திருவொற்றியூர் குப்பம், பலகை தொட்டி குப்பம், கே.வி.கே.குப்பம், பெரிய காசி கோவில் குப்பம், இந்திரா காந்தி குப்பம்.

புதுநகர் குப்பம், நடுக்காசி கோவில் குப்பம், ஓடை குப்பம் உள்ளிட்ட 12 மீனவ கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கும் நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று கூறி பெண்கள் உள்பட சுமார் 100க்கும் மேற்பட்ட மீனவர்கள் பட்டினத்தார் கோவில் அருகில் இன்று காலை திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதில் அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கே.குப்பன் உள்பட ஏராளமனோர் பங்கேற்றனர். மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



தகவல் அறிந்ததும் வண்ணாரப்பேட்டை துணை கமிஷனர் சக்திவேல், உதவி கமிஷனர் சிதம்பர முருகேசன், போக்குவரத்து உதவி கமிஷனர் சீனிவாசன், தண்டையார் பேட்டை ஆர்.டி.ஓ. இப்ராஹிம், மீன்வளத்துறை இணை இயக்குனர் இந்திரா, திருவொற்றியூர் தாசில்தார் சவுந்தர்ராஜன் ஆகியோர் மறியலில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

ஆனால் அவர்கள் மறியலை கைவிட மறுத்து தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து முன்னாள் எம்.எல்.ஏ. குப்பன் உள்பட 500 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்கள் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இதேபோல் எண்ணூர் முகத்துவார கடல் பகுதியில் மீன் பிடித்து வரும் நெட்டுக்குப்பம், தாளங்குப்பம், சின்னகுப்பம், பெரியகுப்பம், காட்டுக்குப்பம், சிவன் படை வீதி குப்பம் உள்ளிட்ட 8 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவி போதாது, கூட்டுறவு சங்கத்தில் உள்ள ஆண், பெண் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், மீன்பிடி படகுகளுக்கு ரூ.70 ஆயிரம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எண்ணூர் தாழங்குப்பம் பகுதியில் இன்று காலை பெண்கள் உள்பட 1000க்கும் மேற்பட்ட மீனவர்கள் சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். அப்போது எண்ணெயில் சேதம் அடைந்த படகு மற்றும் வலைகளை சாலையின் நடுவே போட்டனர்.

மறியல் போராட்டம் காரணமாக சென்னை துறைமுகத்திற்கு செல்லும் கண்டெய்னர் லாரிகள் சரக்குகளோடு விரைவுச்சாலையில் வரிசையாக நிற்கின்றன. மேலும் பஸ் போக்குவரத்து மாற்றிவிடப்பட்டுள்ளது. எண்ணூர் விரைவு சாலையில் திருவொற்றியூரில் இருந்து எண்ணூர் வரை செல்லும் போக்குவரத்து முழுமையாக துண்டிக்கப்பட்டுள்ளது.

# விவசாய தொழிலை முன்னேற்ற வேண்டும் ஜி.கே.வாசன்

சென்னை, டிச.24

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

நமது அன்றாட வாழ்க்கையில் விவசாயிகளின் பங்களிப்பு தான் முதன்மையானவை, முக்கியமானவை. நம் நாட்டில் உள்ள மக்களுக்கு உணவளிக்கவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் விவசாயிகள் நாள்தோறும் மேற்கொள்ளும் பணிகள் மிகவும் இன்றியமையாதது. ஆனால் விவசாய விளை



பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தொகை கிடைப்பதில்லை. விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்களை விவசாயத்துறையில், விவசாயப் பணியில் ஈடுபடுத்த வேண்டும். மத்திய மாநில அரசுகள் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, விவசாயத் தொழிலை முன்னேற்ற வேண்டும். விவசாயிகளுக்கு தேசிய விவசாயிகள் தின வாழ்த்துகளை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் பரமபத வாசல் திறப்பு

ஸ்ரீவில்லிபுத்தூர், டிச.24

வராக சேத்திரமாக விளங்கும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் 108 வைணவதிருத்தலங்களில் பூலோக வைகுண்டம் என போற்றப்படும் ஸ்ரீரங்கத்திற்கு அடுத்து சிறப்பு வாய்ந்த தலமாகும்.

இக்கோவிலானது பெருமாளை நினைத்து திருமொழி பாடிய பெரியாழ்வாரும், திருப்பாவை பாடிய ஆண்டாளும் பிறந்து பெருமைக்குரிய தலமாகும். கண்ணனை கரம் பற்ற நினைத்த ஆண்டாள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்து திருப்பாவை பாடி கண்ணனை கரம் பிடித்தார் என்பது ஐதீகம்.

அனைத்து பெருமாள் கோவில்களிலும் மார்கழி மாதத்தில் ஆண்டாள் பாடிய திருப்பாவை தான் பாடப்படுகிறது. அதனால் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெறும் மார்கழி நீராட்ட உற்சவம் மிகவும் பிரசித்தி பெற்றது. மார்கழி நீராட்ட விழாவில் நடைபெறும் பகல் பத்து, ராப்பத்து, வைகுண்ட ஏகாதசி, எண்ணெய் காப்பு உற்சவம், கூடாரை வெல்லும் சீர் வைபவம் ஆகிய உற்சவங்களில் தமிழகம் முழுவதிலும் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்வர்.



அதன்படி இந்த ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் மார்கழி நீராட்ட விழாவில் பகல் பத்து உற்சவம் கடந்த 13ந் தேதி பச்சை பரப்புதலுடன் தொடங்கியது. பகல் பத்து உற்சவத்தில் வட பத்ர சயனர் சன்னதியில் உள்ள கோபால விலாசம் எனும் பகல் பத்து மண்டபத்தில் தினசரி பலவிதமான அலங்காரங்களில் ஆண்டாள் ரெங்கமன்னார், ஸ்ரீதேவி, பூதேவி சமேத பெரிய பெருமாள் மற்றும் ஆழ்வார்கள் எழுந்தருளி ஒருசேர பக்தர்களுக்கு காட்சி அளித்தனர்.

இந்நிலையில் நேற்றுடன் பகல் பத்து உற்சவம் நிறைவு பெற்றது. ராப்பத்து உற்சவத்தின் முதல் நாளான இன்று வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு காலை 5.50 மணிக்கு பரமபதவாசல் திறக்கப்பட்டது. 'கோவிந்தா' 'கோபாலா' கோஷம் முழங்க பெரிய பெருமாளும்,

அதன்பின் ஸ்ரீஆண்டாள் ரெங்கமன்னாரும் பரமபத வாசல் வழியாக எழுந்தருளினர். அவர்களை பெரியாழ்வார் உள்ளிட்ட ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் வரவேற்றனர். பின்னர் மாட வீதிகள் வழியாக வீதி உலா வந்து ஆண்டாள் ரெங்கமன்னார், பெரிய பெருமாள் ஆகியோர் பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

வைகுண்ட ஏகாதசி விழாவில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

கோவில் அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர். வெங்கட்ராமராஜா மற்றும் உறுப்பினர்கள், செயல் அலுவலர் முத்துராஜா ஆகியோர் ஏற்பாடுகளை செய்தனர். டி.எஸ்.பி. முகேஷ் ஜெயகுமார் தலைமையில் 300 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இதேபோல் திருவண்ணாமலை சீனிவாசபெருமாள், ஸ்ரீவில்லிபுத்தூர் திருவேங்கடமுடையான் கோவில், ராஜபாளையம் அயன் கொல்லங்கொண்டன் இடர்தவிர்த்த பெருமாள், சேத்தூர் சீனிவாச பெருமாள் உள்ளிட்ட பெருமாள் கோவில்களில் காலை 5.50 மணிக்கு பரமபதவாசல் திறக்கப்பட்டது.


# கஞ்சா விற்பனையில் மோதல்: வீட்டில் மண்ணெண்ணெய் பாட்டில் வீச்சு

போரூர், டிச.24

சென்னை கே.கே.நகர் திருவள்ளுவர் காலனி 63 வது தெருவில் வசித்து வருபவர் சதீஷ். இவரது வீட்டில் நேற்று இரவு 2 மண்ணெண்ணெய் பாட்டில்கள் வீசப்பட்டுள்ளது. இதில் பால்கனி பகுதி தீப்பிடித்து எரிந்தது.

இது தொடர்பாக கே.கே. நகர் போலீசில் சதீஷ் புகார் அளித்தார். அதில் விருகம்பாக்கம் பகுதியை சேர்ந்த ஸ்பீடு ஹரீஸ் என்பவர் தனக்கு இன்ஸ்டாகிராமில் கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்துள்ளதாகவும், அவர்தான் மண்ணெண்ணெய் பாட்டில்களை வீசி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மது பாட்டிலில் மண்ணெண்ணெய் நிரப்பி வீட்டின் பால்கனியில் வீசி சென்ற ஹரீஸ் மீது நடவடிக்கை எடுக்க கோரி சதீஷ் தனது புகாரில் குறிப்பிட்டுள்ளார்.



சதீசும், ஹரீசும் நண்பர்களாக இருந்து பிரிந்துள்ளனர். இருவருக்கும் இடையே கஞ்சா விற்பனை செய்வது தொடர்பாக மோதல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

முதலில் நண்பர்களாக இருந்த இருவரும் பின்னர் பிரிந்துள்ளனர். சதீசின் கூட்டாளியான கிச்சா என்பவர் கடந்த ஜூன் மாதம் ஹரீசை தாக்கி காயப்படுத்தி உள்ளார். பின்னர் கிச்சா விபத்தில் சிக்கி உயிரிழந்து உள்ளார்.

இதன் பிறகு ஹரீஸ், சதீசை அழைத்து நீ சொல்லித்தான் கிச்சா என்னை தாக்கினார். தற்போது உன்னுடன் யாரும் இல்லை. உன்னை கொலை செய்யாமல் விட மாட்டேன் என்று மிரட்டல் விடுத்துள்ளார்.

இந்த நிலையில் அது தொடர்பாக இன்ஸ்டாகிராமில் மிரட்டல் விடுத்து மண்ணெண்ணெய் பாட்டில்களும் ஹரீஸ் வீசி இருப்பது தெரிய வந்துள்ளது.

18 வயதே ஆகும் ஹரீஸ் மீது கொலை மிரட்டல் வழக்கு இருக்கும் நிலையில் 19 வயது சதீஷ் மீது 3 வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் இருந்து சொந்த ஊர்களுக்கு பயணம்: பரனூர் சுங்கச்சாவடியில் போக்குவரத்து நெரிசல்

செங்கல்பட்டு, டிச.24

பள்ளிகளுக்கு அரையாண்டு தேர்வு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது. நாளை மறுநாள் கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு என அடுத்தடுத்து விடுமுறை நாட்கள் வருகிறது. இதைத்தொடர்ந்து விடுமுறை மற்றும் பண்டிகையை சொந்த ஊர்களில் கொண்டாட சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் தென் மாவட் டங்களை சேர்ந்தவர்கள் நேற்று முதல் சொந்த ஊர்களுக்கு செல்ல தொடங்கி உள்ளனர்.



இதனால் சென்னை, திருச்சி மார்க்கத்தில் கார் மற்றும் வாகனங்கள் வரிசையாக அணிவகுத்து சென்றன. பஸ்களிலும் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.

இதையடுத்து நேற்று மாலை செங்கல்பட்டு அடுத்த பரனூர் சுங்கச்சாவடி மற்றும் இருகுன்றபள்ளி அருகே உள்ள பாலாறு மேம்பாலத்தில் தென் மாவட்டங்களுக்கு செல்லும் வாகனங்களால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

நீண்ட தூரத்துக்கு வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன. வழக்கத்தை விட வாகன நெரிசல் அதிகமாக இருந்தது.

செங்கல்பட்டு தாலுக்கா மற்றும் பட்டாளம் போக்குவரத்து போலீசார் வாகன நெரிசலை சரிசெய்தனர். கடும் நெரிசல் காரணமாக பாலாற்று பாலத்தில் வாகனங்கள் எறும்பு போல் ஊர்ந்து செல்கின்றன.

# மிச்சாங் புயல் பாதிப்பு ஒரு மாத சம்பளத்தை வழங்கிய தி.மு.க. அமைச்சர்கள், எம்எல்ஏக்கள்

சென்னை, டிச.24

மிச்சாங் புயல் பேரிடர் பாதிப்பிலிருந்து மீள முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு என் ஒரு மாத ஊதியத்தை வழங்குகிறேன் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும் அனைத்து சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களும் நிதி அளித்திடுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதையடுத்து முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்கள், தொழில் அதிபர்கள், திரைப்பிரபலங்கள் என பலரும் நிதி வழங்கி வருகின்றனர்.



இந்நிலையில், தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் சட்டசபை துணைத் தலைவர் பிச்சாண்டி மற்றும் அரசு தலைமைக் கொறடா செழியன் ஆகியோர் சந்தித்தனர்.

அப்போது முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு அமைச்சர்களின் ஒரு மாத ஊதியமான ரூ.35,70,000, திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு மாத ஊதியமான ரூ. 91,34,500 என மொத்தம் 1,27,04,500 ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

24.12.2023



# பைட் கிளப் வெற்றியை கேக் வெட்டி கொண்டாடிய படக்குழு

அப்பாஸ் ஏ ரஹ்மத் இயக்கத்தில் உருவாகி சமீபத்தில் வெளியான திரைப்படம் 'பைட் கிளப்' (Fight Club). இந்த படத்தில் 'உறியடி' விஜய்குமார் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும், கார்த்திகேஅயன், சந்தானம், ஷங்கர் தாஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

கடந்த வெள்ளி கிழமை (டிசம்பர் 15) வெளியான பைட்கிளப்படம்விமர்சனரீதியில்நல்லவரவேற்பை பெற்றது.

மேலும்இந்தபடம்ரூ.5கோடியே75லட்சத்திற்கும் அதிகமாக வசூல் செய்ததாக படக்குழு சில தினங்களுக்கு முன் அறிவித்து இருந்தது.

இந்த நிலையில், பைட் கிளப் படத்தின் வெற்றியை படக்குழு கேக் வெட்டி கொண்டாடியுள்ளது. இது தொடர்பானபுகைப்படங்கள்சமூகவலைதளங்களில் வைரலாகி வருகிறது. ரீல் குட் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த படத்திற்கு கோவிந்த் வசந்தா இசையமைத்துள்ளார். இந்த படத்தை இயக்குனர் லோகேஷ்கனகராஜ்தனது'ஜிஸ்குவாட்'நிறுவனத்தின் மூலம் வெளியிட்டார்.

# நகைச்சுவை நடிகர் போண்டா மணி காலமானார்



சென்னைபொழிச்சலூரில்நடிகர்போண்டாமணிகுடும்பத்துடன்வசித்துவந்தார்.சமீபத்தில்அவர்உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டார். இதனால் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவரது 2 சிறுநீரகமும் செயலிழந்த நிலையில் நடிகர்கள் அவருக்கு உதவி செய்தனர்.

இந்நிலையில்,நேற்றிரவுவீட்டில்திடீரெனமயங்கிவிழுந்தபோண்டாமணி,குரோம்பேட்டைஅரசுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் அவர் உயிர் பிரிந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1991ம் ஆண்டு வெளியான நடிகர் பாக்யராஜின் 'பவுனு பவுனுதான்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆனவர் போண்டா மணி. வின்னர், வேலாயுதம், ஜில்லா, வசீகரா உள்ளிட்ட 250 திரைப்படங்களுக்கு மேலும், ஒரு சில தொலைக்காட்சித் தொடர்களிலும் போண்டா மணி நடித்துள்ளார்.

நடிகர் போண்டா மணியின் மறைவுக்கு திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். சென்னை பொழிச்சநல்லூரில் உள்ள அவரது இல்லத்தில் இறுதிச்சடங்கு நடைபெற உள்ளது.



# இயக்குனர் எஸ்.ஆர். பிரபாகரனின் தந்தை மரணம்...

இயக்குனர் எஸ்.ஆர். பிரபாகரன் தந்தை சூலி ராமு( 23:12:2023) இன்று நற்பகல் 2 மணியளவில் மதுரையில் காலமானார் இவருக்கு வயது 74. மதுரை அருகே உள்ள அவரது பூர்வீகமான ஒத்தவீடு கிராமத்தில் நாளை (24:12:2023)பகல்2மணிக்குநல்லடக்கம்செய்யப்படுகிறது.

தமிழ் சினிமாவில் சுந்தரபாண்டியன், இது கதிர்வேலன் காதல், சத்ரியன் மற்றும் கொம்பு வெச்ச சிங்கம்டா போன்ற படங்களை இயக்கியவர் எஸ்.ஆர். பிரபாகாரன். இவர் கடைசியாக இயக்கி ஓ.டி.டி. தளத்தில் வெளியான "செங்கலம்" இணைய தொடர் விமர்சன ரீதியில் நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.



# முதல் நாளில் இத்தனை கோடிகளா? வசூலில் பட்டையை கிளப்பும் சலார்

இயக்குனர் பிரசாந்த் நீல் இயக்கத்தில் உருவாகி நேற்று (டிசம்பர் 22) வெளியான திரைப்படம் "சலார்." பிரபாஸ் நாயகனாக நடித்திருக்கும் சலார் படத்தை கே.ஜி.எஃப். படத்தை தயாரித்த ஹோம்பாலே பிலிம்ஸ் தயாரித்து இருக்கிறது. இந்த படத்தில் வரதராஜ மன்னார் என்ற கதாபாத்திரத்தில் பிரத்விராஜ் நடித்துள்ளார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் ரிலீஸ் ஆன சலார் படத்தின் முதல் நாள் வசூல் பற்றிய தகவல்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில், சலார் படம் ரிலீஸ் ஆன முதல் நாளில் மட்டும் உலகளவில் ரூ. 178.7 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்த படம் தெலுங்கு, தமிழ், கன்னடா, மலையாளம் மற்றும் இந்தி என மொத்தம் ஐந்து மொழிகளில் ரிலீஸ் ஆகி இருக்கிறது. இதில் நடித்துள்ள பிரத்விராஜ் ஐந்து மொழிகளிலும் தானே டப்பிங் செய்துள்ளதாக படம் ரிலீசாகும் முன்பே அறிவித்து இருந்தார்.



# கேப்டன் மில்லர் படத்தின் உன் ஒளியிலே பாடல் வெளியானது.. சமூக வலைதளங்களில் வைரல்

இயக்குனர்அருண்மாதேஸ்வரன்இயக்கத்தில்தனுஷ்'கேப்டன்மில்லர்'படத்தில்நடித்துள்ளார்.வரலாற்று பாணியில் உருவாகியுள்ள இப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

தனுஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் புதிய படம் "கேப்டன் மில்லர்." அருண் மாதேஸ்வரன் இயக்கி இருக்கும் கேப்டன் மில்லர் படம் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையை ஒட்டி ரிலீசாக இருக்கிறது. இந்த படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இதில் பிரியங்கா அருள் மோகன், நிவேதிதா சதிஷ், ஜான் கொக்கன், சுமேஷ் மூர் மற்றும் சிவராஜ்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். 'கேப்டன் மில்லர்' திரைப்படத்தின் டீசர் மற்றும் பாடல் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்த நிலையில், கேப்டன் மில்லர் படத்தின் 2வது பாடல் வெளியாகி உள்ளது.

# ஐபிஎல் 2024 தொடரில் இருந்து ஹர்திக் பாண்ட்யா விலகல்?



அடுத்த ஆண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்கள் ஏலத்துக்கு முன்பு தங்களது வீரர்களை பரிமாற்றம் செய்து கொள்ள முடியும். வீரர்களை தங்களது அணியில் தக்க வைத்துக் கொள்ளவும், விடுவிக்கவும் முடியும்.

அதன்படி ஹர்திக் பாண்ட்யாவை மும்பை இந்தியன்ஸ் அணி விலைக்கு வாங்கியது. அதனை தொடர்ந்து மும்பை இந்தியன்ஸ் அணியின் கேப்டனாக ஹர்திக் பாண்ட்யா அறிவிக்கப்பட்டார்.

இந்நிலையில் அவர் கணுக்காலில் ஏற்பட்ட காயம் முழுமையாக குணமடையாத நிலையில் வரும் ஐபிஎல் தொடரில் இருந்து விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இதனால் மும்பை இந்தியன்ஸ் கேப்டனாக மீண்டும் ரோகித் செயல்பட அதிக வாய்ப்புள்ளதாகவும் தகவல் வந்துள்ளது.

இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல். தொடர்களில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி இதுவரை ஐந்து முறை கோப்பையை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# எனக்கு அப்போ 7 வயசு இருக்கும்.. ரெய்னாவை சந்தித்த அனுபவம் பகிர்ந்த சமீர் ரிஸ்வி



துபாயில் 17வது சீசனுக்கான ஐபிஎல் 2024 ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் நியூசிலாந்து அணியின் ஆல்ரவுண்டரானரச்சின்ரவீந்திராவை சென்னைசூப்பர் கிங்ஸ் அணியானது ரூ.1.80 கோடிக்கு வாங்கியது. இவரைத் தொடர்ந்து ஷர்துல் தாக்கூர் ரூ.4 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டார். இவர்களது வரிசையில் டேரில் மிட்செல் ரூ.14 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டிருந்தார்.

பெரிய வீரர்களுக்கு மத்தியில் 20 வயதான உத்திரபிரதேச இளம் வீரரான சமீர் ரிஸ்வியை சென்னை சூப்பர் கிங்ஸ் அணி ரூ.8.40 கோடிக்கு ஏலம் எடுத்தது. இந்த வீரர்உள்ளூர்தொடரிகளில்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருந்த நிலையில் சென்னை சூப்பர் கிங்ஸ் இவரை ஏலம் எடுத்தது.

இந்நிலையில் சமீர் ரிஸ்வி எக்ஸ் தளத்தில் ஒரு புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது. அதில் அவர் 12 ஆண்டுக்கு முன்னர் சுரேஷ் ரெய்னாவுடன் எடுத்து கொண்ட புகைப்படமும் நடப்பு ஆண்டில் எடுத்து கொண்ட புகைப்படத்தையும் அவர் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

2011ம் ஆண்டு, எனக்கு 78 வயது இருக்கும் போது, ரெய்னா ரஞ்சி கோப்பை விளையாடிக் கொண்டிருந்தார். அந்த விளையாட்டில் நான் ஒரு பால்பாய். ரெய்னா பேட்டிங் செய்த போது, என்னை அவருக்கு பந்துவீச சொன்னார். மேலும் ஒரு இன்னிங்சுக்குப் பிறகு, அவர் ஸ்லிப் கேட்ச்சிங் பயிற்சி செய்து கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து, அவர் என்னை அழைத்து அவருடன் என்னையும் ஸ்லிப்பில் சேர்த்துவிட்டார். அங்கு நான் அவரை முதன்முறையாக சந்தித்தேன். அவர் தனது சன்கிளாஸை எனக்கு பரிசளித்தார். அதுவே எனது முதல் சந்திப்பு. இவ்வாறு ரிஸ்வி கூறினார்.

# சொந்த மண்ணில் சொதப்பிய நியூசிலாந்து.. வரலாற்று வெற்றி பெற்ற வங்காளதேசம்



நியூசிலாந்து வங்காளதேசம் அணிகள் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. முதல் 2 போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்நிலையில் இரு அணிகளுக்கு இடையேயான 3வது ஒருநாள் போட்டி இன்றுநடைபெற்றது. இதில்டாஸ்வென்றவங்காளதேச அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.

அதன்படி நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக ரச்சின் ரவீந்திரா 8, ஹென்றி நிக்கோலஸ் 1 ரன்களில் அவுட்டாகி ஏமாற்றத்தை கொடுத்தனர். அடுத்த சிறிது நேரத்தில் வில் எங் 24 ரன்களிலும் கேப்டன் டாம் லாதம் 21 ரன்களிலும் சோரிபுல் இஸ்லாம் பந்து வீச்சில் ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்த வந்த வீரர்கள் டாம் பிளண்டல் 4, மால் சேப்மென் 2, ஜோஷ் கிளார்க்சன் 16 என சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தனர். இறுதியில் 31.4 ஓவரில் 98 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. வங்காளதேசம் தரப்பில் சோரிபுல் இஸ்லாம் 3, டன்சிம் ஹசன் 3, சௌம்மியா சர்கார் 3 விக்கெட்களை எடுத்தனர்.

அதைத்தொடர்ந்து 99 என்ற சுலபமான இலக்கை துரத்திய வங்கதேசத்திற்கு அனாமல் ஹைக் 37 (33) கேப்டன் நஜ்முல் சாண்டோ 51★ (42) ரன்கள் எடுத்து 15.1 ஓவரிலேயே 9 விக்கெட் வித்தியாசத்தில் மிகவும் எளிதான வெற்றியை பெற்றுக் கொடுத்தனர்.

இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட்டில் நியூசிலாந்துக்கு எதிராக அதனுடைய சொந்த மண்ணில் முதல் முறையாக ஒரு போட்டியில் வென்று வங்கதேசம் புதிய வரலாறு படைத்தது. குறிப்பாக 2007 முதல் நியூசிலாந்து மண்ணில் இதற்கு முன் விளையாடிய 18 போட்டிகளிலும் தோல்விகளை சந்தித்தது. ஆனால் தற்போது அந்த மோசமான வரலாற்றை வங்காளதேசம் மாற்றியுள்ளது.

நியூசிலாந்து ஒருநாள் கிரிக்கெட்டில் வங்கதேசத்துக்கு எதிராக முதல் முறையாக 100 ரன்களுக்குள் ஆல் அவுட்டாகி குறைந்தபட்சபதிவுசெய்துமோசமானசாதனைபடைத்தது.



**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**

**வானின் றமையா தொழுக்கு**

**விளக்கம்:**

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்

# பஜ்ரங் புனியாவை தொடர்ந்து பத்மஶ்ரீ விருதை திருப்பி அளிக்கும் மற்றொரு வீரர்



இந்திய மல்யுத்த கூட்டமைப்பு தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. இதில் முன்னாள் தலைவரான பிரிஜ் பூஷன் சரண் சிங்கின் உறவினரான சஞ்சய் சிங் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அவர் இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

மாலிக் மற்றும் பிற விளையாட்டு வீரர்கள் பிரிஜ் பூஷன் மீது பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு களை முன்வைத்தனர். புதிய தலைவராக தேர்வான சஞ்சய் சிங்குக்கு மல்யுத்த வீரர், வீராங்கனை களிடம் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. தேர்தல் முடிவுகள் வெளியானதும் செய்தியாளர்களைச் சந்தித்த மல்யுத்த வீராங்கனை சாக்ஷி மாலிக் கூறுகையில், "குற்றம் சுமத்தப்பட்ட பிரிஜ் பூஷன் சிங்கின் நெருங்கிய உறவினரான சஞ்சய் சிங் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதை என்னால் ஏற்க முடியாது. எனவே நான் மல்யுத்தத்தில் இருந்து விலகுகிறேன்" என கண்ணீர் மல்க தெரிவித்தார். இதைதொடர்ந்து பத்மஶ்ரீ விருதை திருப்பி அளிக்க உள்ளேன் என பிரதமர் மோடிக்கு மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக பஜ்ரங் புனியா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், "புதிய தலைவராக தேர்வான சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதற்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு எனக்கு வழங்கிய பத்மஶ்ரீ விருதை திருப்பி அளிக்க உள்ளேன்" என காட்டமாக பதிவிட்டார்.

பஜ்ரங் புன்யாவை தொடர்ந்து, மல்யுத்த வீரர் விரேந்தர்சிங்கும் தடகள வீராங்கனை சாக்ஷி மாலிக்கிற்கு ஆதரவு அளிக்கும் வகையில், பத்மஶ்ரீ விருதை திருப்பி அளிப்பதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து விரேந்தர் சிங் தனது எக்ஸ் பக்கத்தில் கூறுகையில்,

"எனது சகோதரியும், நாட்டின் மகளுக்காக, பிரதமர் நரேந்திர மோடியிடம் பத்மஶ்ரீ விருதை திருப்பி அளிக்கிறேன். உங்கள் மகள் மற்றும் எனது சகோதரி சாக்ஷி மாலிக்கைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன். ஆனால், அவர்களின் முடிவையும் முன்வைக்க வேண்டும் என நாட்டின் முன்னணி வீரர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்" என்று சச்சின் டெண்டுல்கர் மற்றும் நீரஜ் சோப்ராவை டேக் செய்து பதிவிட்டுள்ளார்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.